## முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

இடைக்கால மனு எண் 26/2018

நிறைவேற்றுகை மனு எண். 27/2017

இன்று 2023 ம் ஆண்டு ஜுலை திங்கள் 4 ம் நாள் இன்று இந்த ம.சா.1ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.கே.ஆர்.கண்ணன்,B.A.,B.L., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | : | ஜின்னா |
| தந்தை பெயர் | : | ரகமதுல்லா |
| வயது | : | 53 |

முதல் விசாரணை

எதிர்மனுதாரர் ஆஜர். 5ம் மனுதாரர் ஆஜர். மனுதாரர் தரப்பில் வேறு வழக்கறிஞர் வைப்பதாக 5ம் மனுதாரர் திறந்த நீதிமன்றத்தில் தெரிவித்தார். முதல் விசாரணை வாக்குமூலத்தின் நகல் 5ம் மனுதாரருக்கு வழங்கப்பட்டது. மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். நான் இந்த மனுவில் மனுதாரர். நிறைவேற்று மனுவில் எதிர்மனுதாரர்.

நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையில் கூறியுள்ள விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். அவை நான் கூறியவை தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக் கொள்ள கோருகிறேன். கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பில் குறியீடு செய்யக் கேட்டுக் கொள்கிறேன்.

09-02-2018 – மனுதாரர் கிராம நிர்வாக அலுவலருக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் **ம.சா.ஆ.**1 ஆகும்.

அஞ்சலக ரசீது ( 3 எண்ணிக்கை) **ம.சா.ஆ.2** ஆகும்.

மனுப்படி உத்தரவாக கேட்டுக் கொள்கிறேன்.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

Sd/-K.R.Kannan

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி

திருப்பூர்.